ளுடைய சங்கம் ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய் தருவதாக முன் வந்திருக்கிறார்கள். அங்கே ஒரு பாலிடெக்னிக் தொடங்க ஏற்பாடு இருக்கிறது. அதேபோல் நிதி வருகிற வாயில் ஏதாவது தெரியுமானால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் ஏற்படுத்த முயற்சிக்கலாம்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள், தர்ம சிந்தனையுள்ள அமைப்புகள் போன்றவை தனியாக பாலிடெக்னிக் ஏற்படுத்த மனுச் செய்தால் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிறுவனத்தினுடைய வருமான வாயில்கள், அவர்களுக்குள்ள மொத்த செல்வ மதிப்பு அமைப்பு இவைகளைக் கருதிப்பார்த்து ஏற்க முடியுமானால், ஏற்கலாம்.

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் புதிய கிளை நிலையம் அமைத்தல்.

*224 **திரு. துரை சந்திரசேகரன் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவையாறு நகரில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் புதிய கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தகுந்த நிலம் கையகப்படுத்தப்பட்டதும், கிளை நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் சமீபத்தில் 3.0 ஏக்கர் புன்செய் நிலம் சத்திரம் நிறுவனத்தின் மூலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. சத்திர நிருவாகத்திடமிருந்து நிலத்தைப் பெற்று போக்குவரத்து கிளை நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் கிளை நிலையம் அமைக்கின்ற மிக முக்கியமான பணி விரைவிலே தொடங்கியாக வேண்டும். நன்செய் நிலமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே நிலம் நமக்குப் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. சத்திர நிலம் அரசின் பொறுப்பிலே இருக்குமானால், சோழன் போக்குவரத்துக் கழக நிருவாகிகளுக்குத் தெரிவித்து, அதை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அணுகி அந்த நிலத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கிளை நிலையம் எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது அமைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான இடம் கிடைத்ததற்குப் பிறகு, இடத்தினுடைய பரப்பளவு, அங்கே வந்து நிற்கக்கூடிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை, வந்து செல்லக்கூடிய பயணிகள், அங்கு தங்கி ஓய்வு எடுக்கக்கூடிய தொழிலாளர்கள் ஆகியவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும்.

மகளிர் பேருந்துகளில் மகளிர் நடத்துநர்களை நியமித்தல்

*5098 திரு. சு. குருநாதன் :

திரு. சா. கணேசன் :

திரு. என் பழனிவேல் :

திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிர் பேருந்துகளில் மகளிர் நடத்துநர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.